
# யாகவா முனிவரின் தத்துவங்கள் - அறிவுரைகள்

''...உவாய உவனவ உக்ரஹா...''
(உலகில் பேரழிவு வரப்போகிறது என்பதனை ஏட்டில் எழுதியிருக்கிறார்.)



யாகவா முனிவர்

நீ. நீங்கள் உலகில் பிறக்கின்றாரும் இருக்கின்றாரும் உணரவே இவையெல்லாம் எழுதப்படு கின்றன.

அன்பை நீ பெரிதாக நினை. அதிகாரம் செய்ய ஒருபோதும் நினைக்காதே. அப்படி நீ அதிகாரம் செய்ய நினைத்தால், செய்தால், நான் 1941ம் ஆண்டு முதல் 1982-ம் ஆண்டு முதல், 1992 ஆம் ஆண்டு முதல் 1.2.93 முதல் நான் விதிக்கின்ற சட்டம் இதுவாகும்.

நீரும் காற்றும் ஒன்றாக இணைவது போல் நான் நெருப்பையும் காற்றையும் இணையச் செய்கின் றேன். இந்நாள் முதல் (19.4.93) உலகமெங்கும் பேரழிவாம். அழிவுக்கு காரணம் உன் அகந்தையே ஆகும். ஆகாயம் பொழியாது உன் அகந்தைக்கு. உன் அதிகாரத்தை அழிப்பதற்கு அக்கினியும் காற்றும் துணை புரியுமாம். தரைக்காக கலகம் செய்யாதீர், யாரும். மதத்திற்காக கலகம் செய்யாதீர் யாரும். ஒருவரை ஒருவர் பழி சொல்லாதே. பழிவாங்காதே. சொல்வதைக் கேள். கதை என்று வர்ணித்து விடாதே. கற்பனை என்று ஏளனமாக நினைத்து விடாதே. ஆகாய உலகம் 111ம் பெரியது. அவையில் உன் போன்றார் வாழ்கின்றார் என்பதில் சற்றும் ஐயப்படாதே. அவையைப் படைத்தவனும் யாகவா முனிவர்தான். இவ்யுகத்தைப் படைத்து 38,000 கோடி ஆண்டுகளாம். படைத்தவர் இவரே. இவ் யாகவா முனிவரே ஆவார். 5000 ஆண்டு முன் வரை ஆதிநில்லை யாவும் சரியே. 5000 ஆண்டிற்கு பின் தான் அசுர தாண்டவமாம். இவையில் அசுர தாண்டவத்தை அழிப்பதே இவர் எடுத்த 54 பிறவியின் நோக்கமாம். வந்தார், யுகத்தில் உன் போல் பிறவி கொண்டார். 1983க்குள், 54 வது பிறவியில் அசுரர் யாவரையும் அழித்து, இவர் வந்த கோலங்கள் முடிவுற்று, யாகப்பிரபஞ்சம் அடைந்

தார். லோகத்தில் இவரின்றி ஏதும் அசையாது என்பதில் ஐயம் வேண்டாம். இவர் சொல்வதை மாந்தரார் குலம் இன்றும், என்றும் என்றென்றும் உணரவே இவை யாவும் எழுதப்படுகின்றன. 1986-ம் ஆண்டு முதல் உலகமெங்கும் நிலையாகப் பதவி வகிப்பார் யாருமில்லை. 2007 வரை இது நடவுமாம். 1986 முதல் உலகமெங்கும் கலகத்தால், பஞ்சத்தால், அக்கினியால், பட்டினியால் துன்புறுவர். அனைவரும் உணரவே. மழை வருவதும் அரிதே. உன் அகந்தையே இவ்வழிவுக்குக் காரணமாம். ஆகாய லோகத்தைக் கணக்கெடுக்காதே. இன்றும், என்றும், என்றென்றும். எத்தனைக்கோடி ஆண்டானாலும் உன்னால், உன் விஞ்ஞானத்தால் அதைக்கணக்கெடுக்க முடியாது. உன் விஞ்ஞானத்தால் மழையை வரவழைக்கவும் முடியாது. காற்றை அடக்கவும் முடியாது. அக்கினியை அணைக்கவும் முடியாது. யுகத்தில் நீரின்றி நீ வாழவும் முடியாது. நிலமின்றி நீ இருக்கவும் முடியாது. காற்றின்றி நீ வாழவும் முடியாது. அக்கினியின்றி நீ இருக்கவும் முடியாது. யானின்றி அகில லோகங்களிலும் ஏதும் அசையாது என்பதில் அச்சம் கொள்ளாதே. நீ தேடிக் கொண்டிருந்தவனும் நான் தான். தேடிப்பார் வினாவிடை கிடைக்கும். அதற்காகத்தான் 1986-ம் ஆண்டு முதல் அறிஞர்களையும், கவிஞர்களையும், புலவர்களையும், சாமியார்களையும், துறவிகளையும், ஜோசியக்காரர்களையும் இன்னும் பல பேர்களையும் பசுமையாக அழைத்தேன். பஞ்சம் வரப் போகிறதென்று அழைத்தேன். இவ் இவயவர்களை, மதவாதிகள் அனைவரையும் அழைத்தேன். 1986-1990 வரை அழைத்தேன். வரவில்லை. இனியும் பொறுப்பதற்கில்லை என்றுதான் நான் உவனவம் கொண்டேன். உக்ரவம் கொண்டேன். தர்மாவைக் காப்பதற்கும், கர்மாவை அழிப்பதற்கும் 111 கோடி முனிவர்களை உலகமெங்கும் ஏவிவிட்டேன், நான் தான். படிப்பென்று அலைந்தாரைக் கண்டேன். பணம் பணமென்று அலைவாரைக் கண்டேன். பதவி, பதவி என்று அலைவாரைக் கண்டேன். இரக்கக் குணம் கொண்டாரை நான் காணேன். 1941 முதல் 1993 வரை காணேன். இதற்காகத்தான், கர்மாவை அழிப்பதற்கு மாயவர்களை இறக்கி விட்டவன் நானே ஆவேன்.

— யாகவா முனிவன் —

இணைஸ்த்வ காண்ட முனிவர்கள் 111 கோடி பேரையும் இறக்கியாகி விட்டது. 11.5.1992 முதல் இவ் முனிவர்களை கண்காணிப்பர் 111 ஒற்றர்களாம். அழிக்கும் குணம் கொண்டவர் இனான்ய முனிவன் ஆவார். மாந்தரார் என்கின்றவரின் கர்மாக்களை சர்வ சம்ஹாரம் செய்வான். அவன் தான் இனான்ய முனிவன். 111 உலகங்களையும் காக்கின்ற யாகவா முனிவனின் சொற்படித்தான் இனி இவ்யுகம் நடக்கும். 1986 முதல் 1993 வரை 11 அவதாரங்கள். 11 பேருக்கு 11 நாதங்கள் கொடுத்துள்ளேன். இவர்களின் - நான் அவதாரம் கொடுத்தவர்களின் பிறப்பில் - பல இரகசியங்கள் உண்டு. இன்னும் 100 பேர் வருவர். நான் கொடுத்தே ஆக வேண்டும். ஆகமொத்தம் 111 பேருக்கு யுவ் யுகத்தில் நான் அவதாரம் கொடுத்தே ஆகவேண்டும்.

உழவன் ஒருவன் விதை தூவினான். பயிராயினபின், தானியக் களஞ்சியங்களாயின. இவற்றைக் கரை சேர்க்க பல பேர் தேவை. அது போல் யுவ் யுகத்தை பசுமை கொள்ள மனிதரைப் போல் 111 அவதாரங்கள் நான் கொடுக்கின்றேன். யாகவா முனிவன் என்கின்ற நான் கொடுக்கின்றேன். அவதாரம் பெறுகின்றார் நன்றியுள்ளவர்களாக இருப்பார். நயவஞ்சகர்களாக இருப்பதும் அரிதே. அவர்களின்

யாகவா முனிவர்

ஞானத்தைக் கேட்டால் உலக மாந்தரார் யாவரும் சுபிட்சம் கொள்வர். 5000 ஆண்டுகளின் முன்பிருந்த நிலை, 2007க்குப் பின் வரும். இனி 1993 முதல் வரப்போகின்ற துன்பங்களுக்கும், பஞ்சங்களுக்கும், பட்டினிகளுக்கும் பின் இவ் 111 பேரால் சுபிட்சம் உண்டாம். சற்றும் ஐயமோ, சந்தேகமோ வேண்டாம். இவ் இவயவர்கள் 111 பேரும் லோகத்தின் ப்ரணங்களைக் கூறுவர். இதில் ஆண்களும் அடங்குவர். பெண்களும் அடங்குவர். முனிவர்களும் இருக்கின்றார். பெண் மாயைகளும் இருக்கின்றார். ஆண் குலத்தைச் சேர்ந்த ஞானிகளும் இருக்கின்றார். இவ் இவயவர்களின் விருப்பப்படி தான் உலகம் இயங்குமாம். இவ் இவயவர்கள் இல்லறம் கொண்டுதான் வாழ்வர். துறவறம் கொண்டு வாழார் யாகவா முனிவர். இருந்தும், இறந்தும் உண்டென்றால் உண்டே. எறும்பு பேசுவது இவர் காதில் விழும். பாறைக்குள் இருக்கும் தேரையின் கூவலும் இவர் காதில் விழுமென்றால் உன் குரல் கேளாதோ? மாந்தரார் குலமே உணர். கதையென்று கூறாதே. கடமை என்று உணர். மாந்தாரர் உணர, இக்காலமும் எக்காலமும் ஆதிகாலம் தோன்றுவதற்கு 54 பிறவியில் துன்புற்றவர் இவராவார். அரக்கர்களின் சாம்ராஜ்யங்களை அழித்தவர் இவராவார்.

தலை எழுத்து அழியாததாகும். நீர்த்தாமரை என்னைக் காணாதிருப்பதும் இல்லை. தாழை மரத்தின் பூவும் தத்துவம் பேசுவதுண்டு மரம், செடி, கொடி அனைத்தும் ஞானம் கொள்வதுண்டு. என் ஒளி ஒரு போதும் அழியாது. நீ வாழுகின்ற உலகம் தான் நரகம். ஒருவர்க்கொருவர் நன்மை செய். செய் நன்றி மறந்தால் திருவோடு கிடைப்பதும் அரிதே. குற்றத்தைச் செய்த பின் மன்னிப்பு என்று மயங்காதே. தவறு செய்த பின் தண்டனை என்பது என்றும், என்றென்றும் உண்டு. 5000 ஆண்டிற்கு முன் ஓலைச்சுவடி கற்றாருண்டு. ஒரு பிழை செய்தாரில்லை. பிறரை துன்புறுத்தினாரில்லை. 1941-இல் 54வது பிறவியில் கண்டேனே. போதாதா? காகித ஏடு செய்ய கற்றாய். படிக்கக் கற்றாய். கலகம் செய்யக் கற்றாய். கடமை செய்ய மறந்தாய். அன்று முதல் வந்ததுதான் துன்பமே. 1992 முதல் பட்டுக் கொண்டிருக்கின்றாயே போதாதா? இதை எல்லாம் செய்கின்றவனும் நான் தான். ஏதேது செய்யப் போகின்றேன் என்று கேள். இதுவெல்லாம் தான் செய்வேன்.

தாய் வாடுவாள். குழந்தை வாடும். பயிர் வாடும். உழவன் வாடுவான். பகற்கொள்ளை பெருகும். பெண்கள் மானபங்கப்படுவர். உலகமெங்கும் மதம், மதம் என்று அலைகின்றாயே மதத்தால் பல கோடி பேர் மடிவர். வெப்பம் தாளமுடியாது பலகோடி பேர் மடிவர். பஞ்சப் பட்டினியால் பல கோடி பேர் மடிவர். உன் விஞ்ஞானத்தால், நீ செய்த வினை கொண்ட விஞ்ஞானத்தால் பலகோடி பேர் மடிவர்.

பூகம்பத்தால் பலகோடி பேர் மடிவர். பறக்கும் தட்டிலே வந்து நிற்பான் முனிவர்களெல்லாம். அவையின் ஒளி பார்த்து கண் கெடுமாம். இடி, மின்னல் தாக்கி பலகோடி பேர் மடிவர். கடலில் பெரும் பூகம்பம் ஏற்படும். ஆதியில் வாழ்ந்த முனிவர்கள், மாயைகள், ஞானிகள் இல்லறமும் தான் தெரியுமாம். கர்மாவை அழிப்பதற்கே இத்தனையும் செய்கின்றார் யாகவா முனிவரும் 111 கோடி முனிவரும் என்பதனை கதையென்று நினைக்காதே. கடமை என்று உன் உள்ளத்தில் பதித்துக் கொள்ளவே இவை யாவும் வரையப்படுகின்றன.

ஆதியை, ஆதிகாலங்களை உணராதவன் நீ. ஆதிகாலத்தில் இன்பங்கண்டாருண்டு.

யாகவா முனிவர்

லோகத்தை அடைந்தாருண்டு. 5000 ஆண்டிற்கு பின் அசுர தாண்டவத்தால் துன்பம் கண்டாருண்டு. 5000 ஆண்டினுள் முனிவர்கள், மாயைகள், ஞானிகள் சிறை பிடிக்கப்பட்டார். அரக்கர்களால், அசுரர்களால், தடாயர்களால், இராட்சிகளால். இவர்களை பழி வாங்குவதற்குத்தான் இவர், யாகவா முனிவர் வந்தார். தனது 54வது பிறவியில் தான் வென்றார். பிரபஞ்சம் அடைந்தார். ஏக போக வினாவிடைக்குள் இவை எல்லாம் வரையப்படுகின்றன. இவையினுள் மறைவுகளும் உண்டு. கற்பனைக் கதையல்ல இது. அன்பாக நினை. மாந்தரார் குலமே அறிவாக நினை. அழிவாக நினைக்காதே. இழிவாக நினைக்காதே. நீ கற்றதெல்லாம் பலனல்ல. நீ ஒருவர்க்கொருவர் கடமை செய்வதே பலனாகும். நீ எச்செயலையும் நற்செயலாகச் செய். நான் காண்பேன். மலரில் எல்லாம் தேன் இருப்பது உண்டு. எங்கோ ஓரிடத்தில் தான் தேன் சேர்த்து சேமிக்குமாம் தேனீ. அது போல் நீ மணமாக உணர். மதமாக உணராதே. உன் தர்மா ஓர் போதும் அழிவதில்லை. உன் அதிகார கர்மத்தை அழிப்பதற்கே காத்திருக்கிறேன் 111 கோடி முனிவருக்குள். இருந்தும் கொல்வேன். இறந்தும் கொல்வேன் கர்மாவை. கற்பினையாக அல்ல, நற்பினையாக உணர். லோகங்கள் யாவும் 111 காண்டங்களும் சரியே. 1986ஆம் ஆண்டு முதல் பேய் இல்லை. பில்லி சூனியம் இல்லை. கிரகம் இல்லை. கிரகணம் இல்லை. உன்னை நீ உணராதிருப்பதும் மேன்மையில்லை. உன்னை நினைத்ததே மேன்மையாகும்.

இவ்யுகம் அழியும், அழியும் என்கிறாய் 2000 ஆம் ஆண்டில், ஓர் போதும் அழியாது. நீ அழிவது உறுதி. உன் சரீரம் அழிவது உறுதி. உன் ஆத்மா ஒரு போதும் அழியாத மேன்மைக் குறியதாகும். விதைகளும் ஒரு போதும் அழியாது. உன் உயிரும் ஒரு போதும் அழியாது. உணர்ந்து பார் விடையுண்டு. 2000 ஆம் ஆண்டில் உலகம் அழியும் என்றால், மலர் மணக்காமலும், பெண் பூப்படையாமலும், மலரில் தேனில்லா போகும் நாளும் எந்நாளோ, அந்நாளே உலகம் அழியும்.

லோகத்தின் சிறையே இவ்யுகம். அழகினை இரசிக்காதே அறிவினை செய். அறிவினை நினை. அன்பாம். பேரின்பமாமம். உன் உயிருக்கு. பின் பிறவி தவிர்ப்பதற்கு இதுவே வழியாகும். உன்னை நீ உணர்வதே பெரிதாகும்.

இவ் உலகில் நிம்மதி என்பதை நீ தர்மத்தால் அடையலாம், அன்றி கர்மத்தால் அடைந்திட இயலாது. கர்மத்தைச் செய்தார் இல்லங்களில் நான் கூன், குருடு, ஊமை, சப்பாணி, செவிடு இப்படி பல அவயவங்கள் நான் குறைத்து உயிர் வைத்து உடல் கொல்வேன். அவரவர் சிந்திப்பீர். நீ முன் உணரவே இவை எல்லாம் எழுதப்படுகின்றன. கர்மாவை நீ செய்கின்ற காண்டங்களில் இவ்யுகத்தில் மழை பொழிவதும் அரிதே. மழைக்காக அபலை யாகங்கள் செய்யாதே. போலி வேடதாரிகளை நம்பி வாழாதே. நான் சொல்லும் கருத்துக்கள் பொய்யாகாது. யாகவா முனிவர் யுகத்தில் கற்றாரில்லை. 54 பிறவியிலும் யாகவா முனிவரின் வயது 5000 மாம். இவ் யுகத்தில் துன்புற்றார் மானிடரார், 5000 ஆண்டுமாம். பிறரை நீ வஞ்சம் கொண்டால் மதத்தாலோ, உன் உடல் பலத்தாலோ, உன் அதிகார பலத்தாலோ, 1941ம் ஆண்டு முதல் சட்டம் வகுத்தாகி விட்டது. பிரபஞ்சத்தில் என்பதனை உன் உள்ளத்தில் ஆழ பதித்துச் செயல்படு. ஆதிகால முனிவர்களும், மாயைகளும், தர்மாவைக் காப்பதற்கும் கர்மாவை அழிப்பதற்கும் ஞானிகளும் தனக்கும் மேல் ஒருவர் இருக்கின்றார் என்று கூறினாரே அன்று. அவர்தான் இந்த யாகவா முனிவர் என்பதில் சற்றும் ஐயம் வேண்டாம். மனிதனாக வாழ்வாரே

யாகவா முனிவர்

உயர்வடைவர். தர்மத்தைச் செய்தார் மேன்மை அடைவர் கர்மத்தைச் செய்தார். தாழ்வடைவர், என்பதில் ஐயமது தான் வேண்டாம்.

## யாகவா முனிவர் யுவ் யுகத்தில்

மாந்தரார் போல் தான் பிறவி கொண்டார், என்றால் இளமையிலே ஆடு, மாடு மேய்த்தார், பரதேசி ஆனார். விறகு வெட்டி ஆனார், பள்ளிக்கே சென்றாரில்லை. ஆதியிலே 53 பிறவியிலும் சிறுவயதிலேயே கொல்லப்பட்டார் அரக்கர்களால். 54வது பிறவியில்தான் அரக்கர், அசுரர், தடாயன், ராட்சசிகளை அழித்து லோக பிரபஞ்சம் அடைந்தார். யுகத்தில் இல்லறத்தில் வாழ்ந்துகொண்டே. பிறந்தது ஓர் இடம், அலைந்தது ஓர் இடம். அடைந்தது ஓர் இடம். உயிர் விட்டு உயிர் உடல் எடுத்தது ஓர் இடமாம், என்றால் மாந்தரார் குலமே அறிவை உணர் அழிவைச் செய்யாதே. தரை காத்திருக்கின்றது உன் உடலுக்காக, நான் காத்திருக்கின்றேன் லோகத்தில் உன் உயிருக்காக. ப்ரண ப்ரண்ன ப்ரணவ ப்ரண்ன ப்ரணஹா ப்ரணவ நம் நமா நமாய நமஹா நம் நமா நமஹா நாத நத நாதானுவாய நதா ப்ரணம் ப்ரண்வம்.

இவைக்குள் ஏக போக வினா விடைகளும் உண்டாம்.

யாகவா முனிவர்

29. 4. 1993